# சங்க இலக்கியச் சமுதாயத்தில் பெண்களின் நிலையும் ஆடை அணிகலன்களும்

முனைவர். சியாமளா ஜெயக்குமார்,
சிரேஸ்ட விரிவுரையாளர், நடனத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை.

52

**ஆய்வுச்சுருக்கம்:**

மனித வாழ்வின் இலக்கை எடுத்துக்காட்டும் ஓர் கண்ணாடியே இலக்கியங்கள். ஒரு சமுதாயத்தின் தோற்றத்தினையும், வளர்ச்சியினையும் அவர்களின் வாழ்க்கை முறையினையும், உணவு உடை போன்ற இன்னோரன்ன விடயங்களைக் கண்டறிய இலக்கியங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. மக்கள் சமுதாயமாக ஒன்றுகூடி வாழத்தலைப்பட்ட பழங்காலத்திலேயே தனிமனித ஒழுக்கத்தையும், சமுதாயக் கோட்பாடுகளையும் வரையறுத்துத்தந்த பெருமை இவ் இலக்கியங்களையே சாரும். இவ் இலக்கியங்களில் குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் எவ்வாறு பெண்களின் வாழ்வியல் அமைந்திருந்தது என்பதனையும், அவர்கள் எவ்வகையான ஆடை மற்றும் அணிகலன்களை அணிந்து விளங்கினர் என்பதனை ஆராயும் வகையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** சமூகத்தில் பெண்கள், ஆடை ஆபரணங்கள்.

**முன்னுரை:**

தமிழர்தம் வாழ்வின் தொடக்ககாலம் முதல் பெண்மையைப் போற்றிச் சிறப்பித்தார்கள். ‘உண்ணாமுலை உமையாளொடு உடனாகிய ஒருவன்’ என இறைவனையே உமையொரு பாகனாகக் கண்ட பெருமை தமிழர்களையே சாரும். சங்க காலச் சமுதாயத்திலும் பெண்கள் மிகவும் சிறந்த இடத்தினைப்பெற்றிருந்தனர். குறிப்பாகப் பெண் தெய்வங்களே முதன்மை வாய்தவையாக விளங்கின. இத்தகைய சிறந்த நிலையினைப் பெற்றுத் திகழ்ந்த பெண்களின் நிலை அதனைத்தொடர்ந்துவந்த காலப்பகுதியிலேயே பெண்கள் தொடர்பான கருத்துநிலைகள் மாற்றமடையத்தொடங்கியது. இல்வாழ்க்கையையும் அதன் இன்ப துன்பங்களையும் வெறுத்துத்தள்ளிய சமணசமயத்தவர்களே பெண்களை வெறுத்தொதுக்கினர். குறிப்பாக பெண்களை நம்பக்கூடாதென்றும் அவர்கள் உரைப்பதனை உண்மையெனக்

கொள்ளக்கூடாதென்றும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய ஏலாதியில் குறிப்பிடப்படுகின்றது.

ஆனால் சங்க நூல்களில் பெண்கள் சமூக விழாக்களில் பங்குபற்றி மிகவும் காத்திரமான இடத்தினை வகித்ததுடன் சுதந்திரமான வாழ்க்கை நடாத்தியதையும் அறியமுடிகின்றது. அதாவது பெண்கள் கணவருடன் இணைந்து கள்ளருந்தியதையும் (பட்டினப்பாலை), கள்ளருந்தியதனால் அவர்களின் கண்கள் குளிர்மையடைந்ததையும் (பெரும்பாணாற்றுப்படை), கல்வியறிவற்ற மாந்தருடன் கைகோர்த்து விளையாடியதையும் (மதுரைக்காஞ்சி), அனைவரும் காணும்வகையில் கடலில் நீந்தி விளையாடியதையும் (சிறுபாணாற்றுப்படை), கரைகளால் சூழப்பட்ட குளங்களில் பெண்கள் பாய்ந்து விளையாடியதையும் (பெரும்பாணாற்றுப்படை) குறிப்பிடலாம்.

ஒழுக்கத்திலிருந்து தவறுதல் பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. பெண்களுக்கு இருக்கவேண்டிய மடம், நாணம், அச்சம் முதலிய பண்புகளைப்பற்றிப் பல நூல்களில் காணக்கிடக்கின்றது. முல்லை போன்ற பற்களையுடைய மகளிரின் கற்புச்சிறப்பை சிறுபாணாற்றுப்படை மற்றும் அகநாநூறு போன்ற நூல்களில் மிக அழகாக விளக்கப்படுகின்றது. மேலும் அருந்ததியின் கற்புப் பெண்களின் கற்புக்கு உவமனமாக ஐங்குநூற்றில் கூறப்படவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பெண்கள் வினைகள் இயற்றுவதில் கணவணுக்குப் பெருந்துணையாக இருந்தனர். பரணில் ஏறி கிளிகளை ஓட்டிப் பயிரைப் பேணுவதிலும், கருவியினாலும் கல்லெறிந்தும் முரசம் அறைந்தும் வானிலே திரியும் பறவைகளை விரட்டுவதிலும் (குறிஞ்சி 41-44), தழலினைச்சுற்றியும், தட்டையினைத்தட்டியும், அழகிய தழையாடையை அணிந்த குறமகள் திணைப்புலத்தைப் காப்பதில் சிறந்து விளங்கியதையும் (அகநாநூற்றில்- 11-13), ஆய்மகளிர் மோரும் நெய்யும் விற்று அதில் கிடைத்த வருமானத்தில் பொன்னை வாங்காது நல்ல பாலெருமையையும் பசுவையும் கரிய எருமை நாகினையும் வாங்கியதாக (பெரும்பாணாற்றுப்படை 158-166) குறிப்பிடப்படுவதிலிருந்தும் வினைத்திறனுடன் பெண்கள் விளங்கிங்கியதனைப் பறைசாற்றுகின்றது. மேலும் பாலை நிலத்துப் பெண்கள் இரும்பு அலகினையும் உறுதியான கைப்பிடியையுமுடைய மண்வெட்டியினாலே மண்ணினைப்பதப்படுத்தி அதில் நெல்லினை விளையச்செய்து விளைந்த நெல்லினை முன்றலில் உள்ள உரலில் இட்டு உலக்கையினால் குற்றுவர் (பெரும்பாணாற்றுப்படை 90-97). நெல்லுக்குற்றும்போது மகளிர் வேலைக்களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடுவர் (மலைபடு. 342). இவ்வாறு பாடும் பாடலினை வள்ளைப்பாட்டு எனக் குறுந்தொகை பகர்கின்றது (குறுந்தொகை -1) .

இல்லற மகளிர் இருள் அகன்று காலைக்கதிரவன் ஒளிபரப்பும் வேளையில் இல்லத்தில் செய்யவேண்டிய அனைத்து வேலைகளையும் விரும்பிச்செய்தனர் (மதுரைக்.664). அதேபோன்று பாசறையில் தொழிலியற்றுவதிலும் வல்லவர்களாகவும் (முல்லை. 45-49) விளங்கினர்.

இத்தகைய செயற்பாடுகள் ஒவ்வொன்றின்போதும் மகளிர் பல ஆடைகளையும் அணிகலன்களையும் அணிந்தனை அறியக்கூடியதாக உள்ளது.

**ஆடை:**

மக்கள் பண்டைக்காலத்தில் ஆடையின்றி இருந்தார்கள். காலப்போக்கில் தழைகளையும் மரப்பட்டைகளையும் உடைகளாக உடுக்கத்தொடங்கினர். விலங்குகளின் தோல்களையும் ஆடைகளாகப் பயன்படுத்தினர். நெசவுத்தொழிலைக் கண்டறிந்த பின்னரே பருத்தி ஆடைகளையும் பட்டாடைகளையும் நெய்யத் தொடங்கினர். மக்களது அறிவு வளர வளர அவர்களின் வசதிகளும் பெருகப் பெருக அவர்களுடைய வாழ்க்கைமுறை உயர உயர உடைகளும் ஆபரணங்களும் ஓர் உன்னத நிலையின எட்டியது.

கலைக்களஞ்சியத்தில் (ப.356) பெண்கள் இடுப்பிலிருந்து கால்வரை தொங்கும் புடவையை அணிந்திருந்தனர். இடுப்பிற்கு மேல் வாசனைப் பொடியும் சந்தணக் குழம்பும் பூசினர். பணிப்பெண்கள் தொடையின் பாதிவரை புடவையை உடுத்தனர். காட்டப் பிரதேசத்துப் பெண்கள் இலைகளைக் கோர்த்த தழை உடையை உடுத்தனர் போன்ற பல தகவல்களைத் தருகின்றன.

சங்ககாலத் தமிழர்கள் அவரவர் வாழ்க்கைத்தரத்திற்கேற்ற உடைகளை அணிந்தனர். ஆண்கள் பொதுவாக இடுப்பில் ஓர் ஆடையும் மேலுடம்பில் ஒரு துண்டும் போடுவதுண்டு. “உண்பதுநாழி உடுப்பவை இரண்டே’ (புறம்:189) எனக் கூறுகின்றார் நக்கீரர். மேலாடையும் கச்சும் அணிவதனை மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுகின்றது.

கரிகாலன் தன்னைப் புகழ்ந்து பாடிய பொருணருக்கு இழை போனவழி இது என்று காணவியலாத நுண்மையினையுடைய வேலைப்பாடு நிறைந்த அதாவது பாம்பின் தோலினை ஒத்த தரம் உயர்ந்த ஆடையை நல்கினான் என்பதனை

‘நோக்கு நுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து

அரவுரியன்ன அறுவை’ (பொரு.ஆ. 82-83)

எனும் பாடலடியினூடு அறியலாம். மேலும் இப்பேரரசன் பட்டாடைகளையும் பொருநருக்கு நல்கியதை ‘… பட்டுடை நல்கி’ (பொரு.ஆ. 155) எனும் பாடலடியினூடு அறியக்கூடியதாக உள்ளது.

ஒய்மான் நல்லியக்கோடன் பாணர்க்கு மூங்கிலின் மெல்லிய பட்டாடையை உரித்தாற்போன்ற மாசில்லாத உடையை வழங்கினான் என்பதனை ‘மாசில் காம்புசொலித்தன்ன அறுவை’

(சிறுபாண். 235-236) எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. புடவைகள் நீளமாக நெய்யப்பட்டு தேவைக்கேற்ப அறுக்கப்படுவதனால் அவை அறுவை என்றும் அழைக்கப்படுகின்றன.

**தழை உடை:**

குறமகள் மராமரக் கொத்துக்களை நடுவே வைத்து இலையையுடைய நறிய பூங்கொத்துக்களைச் சுற்றிலும் வைத்துத் தொடுத்த பெரிய-அழகிய தழையுடையை உடுத்தினாள் எனக் கூறப்படுகின்றது (திருமுரு. 201-203). நேய்தல் நில மகள் தளிர்கள், தழைகள், மலர்கள் போன்றவற்றினாலான தழையுடையை அணிந்தாள். காவிரிப்பூம்படடினத்துப் பரதவர் சேரிப்பெண்டிர் இத் தழையுடையை என்பதனையும் (பட்.பாலை. 91) அறியக்கூடியதாக உள்ளது.

**துகில் - கலிங்கம்:**

அரசன் கஞ்சியிட்டுச் சலவை செய்யப்பட்ட துகிலை (ஆடை) அணிந்திருந்தான் (ம.கா. 721). அரசி தன் கணவன் தன்னைப் பிரியாதிருக்கச் செய்வதற்காக பூத்தொழிலையுடைய துகிலை உடுத்தினாள். மேலும் கணவனைப் பிரிந்திருந்த காலப்பகுதியில் மாசு படிந்த நூலினாலான கலிங்கத்தை அணிந்திருந்ததை ' பூந்துகில் மரீஇய … அவிர் நூல் கலிங்கம்' (நெடு. 145-146) எனும் பாலடிகள் உணர்த்துகின்றன. துகில் என்பது ஒருவகை ஆடை என்றும் கலிங்கம் என்பதுஎமற்றொரு வகை ஆடை என்பதும் இதன்மூலம் புலப்படும்.

தொண்டைமான் பாணர்க்குப் பாலாவியை ஒத்த நூலாற்செய்த கலிங்கத்தை ஈர்ந்தான் என்பதனை 'ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்;' (பெரும்பாண். 469) எனும் பாடலடி குறிப்பிடுகின்றது.

பாசறையில் தங்கியிருந்த பாண்டியன் புண்பட்ட தன் படைவீரரரை இரவில் காணச்சென்றான். அப்போது அவனது இடது பக்கத் தோளிலிருந்து அழகிய துகில் நழுவி விழுந்தது. 'புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ' (நெடுநல். 181) எனும் பாடலடி உணர்த்துகின்றது.

ஆடைகள் நூல்களினால் இழையோடி வடிவமைக்கப்படுகின்றன. நன்னன் எனும் குறுநில மன்னன் தன்னனை நாடி வந்த கூத்தர்க்கு இழையோடியவிடம் அறிய முடியாதளவிற்கு நுண்ணிய நூலால் ஆக்கப்பட்ட கலிங்கத்தை வழங்கினான். இதனை 'இழைமருங் கறியா நுழை நூற் கலிங்கம்' (மலைபடு. 561) எனும் பாடலடி உணர்த்துகின்றது. மேலும் நூலினாலான பல்வேறுபட்ட ஆடைகளினை மதுரை நகர நான்கு வீதிகளிலும பரப்பி விற்பனை செய்ததனைக் காணலாம் (மதுரை. 513 ).

மதுரை நகரச்செல்வர் மாலைவேளையில் வண்டியில் ஏறிப் பொழுதைக் கழிக்கச் சென்றனர். அவர்கள் இடுப்பிலே அணிந்த கலிங்கமானது செக்கச்செவேலெனத் தோன்றும் வானத்தை ஒத்த சிவந்த கண்களை மயக்கும் பூவேலைப்பாட்டைக் கொண்டு விளங்கியது (மதுரைக். 431-434).

பேகன் எனும் மன்னன் காட்டு மயிலுக்கு கலிங்கத்தைப் போர்த்தினான் என்பதனை,

'கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய்' எனும் பாடலடியில் குறிப்பிடப்படுகின்றது (சிறுபாண். 85).

காவிரிப்பூம்பட்டினத்துச் செல்வந்த மகளிர் பகற்பொழுதில் பட்டுடைகளையும் இராப் பொழுதில் மென்மையான துகிலையும் உடுத்தினர் என்பதனை,

'பட்டு நீக்கித் துகில் உடுத்தும்' (பட்.பாலை. 107) எனும் பாடலடியின் மூலம் அறியலாம். மேலும் மாமல்லபுரத்துச் செல்வந்த மகளிர் பனிமாசு போன்ற மிக நுண்ணிய துகிலை உடுத்தினர் எனப் பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடப்படுகின்றன (பெரும். ஆ. 329). துகில் என்பதற்கு 'ஒலியல்' என நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார். அதாவது மேலாடை என்பது இதன் பொருளாகும்.

திருப்பரங்குன்றத்துச் சோலையில் முருகனின் சிறப்பினைப் பாடி விளையாடிய சூரர் மகளிர், இந்திரகோபத்தினை ஒத்த சாயம் வற்றாத அதாவது இயல்பான சிவப்பு நிறத்தில் பூவேலைப்பாடமைந்த துகிலை உடுத்திருந்தனர் என்பதனை,

'கோபத் தன்ன தோயாப் பூந்துகில்' (திருமுரு.ஆ. 15) எனும் பாடலடிகள் குறிப்பிடுகின்றது.

'துணங்கைக் கூத்தாடிய பூதங்கள் துகிலை உடுத்தன போல' (பெரும்.ஆ. 234-235) என உவமையாகக் குறிப்பிடப்படகின்றன. இங்கு துகில் என்பதற்கு நச்சினார்க்கினியர்; வெள்ளை ஆடை எனப் பொருள் கொள்கின்றார்.

**கச்சை-கச்சு**

உடலின் மேற்பாகத்திற்கு சந்தனம், குங்குமம் போன்றவற்றைக் குழம்பாகப் பூசி அதன்மீது இலை, பூ முதலிய சித்திரங்களை வரைவர். இச்சித்திரம் தொய்யில் எனப்படும்.(நற். ஊஉ 6-7). தலைமகளின் முலை வனப்பெய்துவதற்காகத் தலைமகன் அவளது மார்பில் தொய்யில் எழுதுவான் (குறுந். ஊஎ 6-7). மேலும் மருதப்பூவை இளமுலையிலே இடுவதுபோன்று சந்தனத்தை இட்டு அவ்வீரம் காய்வதற்கு முன்னர் வேங்கைப்பூவினது நுண்ணிய தாதையும் அதன்மேலிட்டு மார்பினை அலங்கரிப்பர். (திருமுரு.32-36). கரும்பெழுதிய தொய்யினையுடைய பருத்த தோள் என குறுந்தொகையில் குறிப்பிடுவதிலிருந்து குங்குமக்குழம்பால் பருத்த தோள்களை அலங்கரித்ததனையும் அறியமுடிகின்றது (குறுந்.1).

அரசமாதேவி மார்பில் வம்பு (கச்சு) வலித்துக் கட்டியிருந்தாள் என்று நெடுநல்வாடையில் குறிப்பிடப்படுகின்றது (நெடு. 149-150). இவ்வாறு பெண்கள் தமது மார்பினை மறைப்பதற்காக பலவேறுபட்ட அலங்காரங்களை மேற்கொண்டதனை அறியமுடிகின்றது.

**அணிகலன்கள்**

மக்களின் நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் வளர்ப்பதில் அணிகலன்கள் முக்கிய இடம்பெறுகின்றது. அணிந்து கொள்ளப்படுவதால் அணிகலன்கள் எனப்படுகின்றது.

'நுண்பூண் மடந்தையைத் தந்நோய் போல' (குறுந். 147) எனும் பாடலடியினூடு நுண்ணிய வேலைப்பாடமைந்த ஆபரணங்களைப்பெண்கள் அணிந்திருந்ததை அறியக்கூடியதாக உள்ளது.

**1. கைவளைகள்**

சங்ககாலப் பெண்கள் வளையலுக்கு முதன்மையானதொரு இடத்தினை வழங்கினர். அதாவது கணவன் இறந்தவுடன் மனைவி வளையலை அணிவதில்லை. இவர்கள் பொன், சங்கு முதலியவற்றால் செய்த வளையலை அணிந்தனர். கணவரைப் பிரிந்த மகளிர் வலம்புரிச் சங்கினை அறுத்துச் செய்த வளையினைக் கையிலணிந்தும் விளங்கினர் (நெடுநல்.142).

அவர்கள் அணிந்த இழைகள் ஒளிபொருந்திய பொன்னால் செய்யப்பட்டனவாகவும், கைவளைகள் அழகிய சித்திர வேலைப்பாடுடையனவாகவும் திகழ்ந்தன (மதுரைக். 443-446). வளை இறுகுதல் (குறுந். 260) என்பது நல்ல நிமித்தமாகக் கொள்ளப்பட்ட அதேவேளை வளை நெகிழ்தல் என்பது தலைவியின் துயரினைக் குறித்தது. தலைவி தன் தலைவனைக் காணாது கவலையுற்றிருந்ததால் உடல் மெலிந்து அவளது வளையலும் கைகளிலிருந்து கழன்று விழுந்தன. இதனை 'கோடு ஈர் இலங்கு வளை நெகிழ' (குறுந். 11) எனும் பாடலடியினூடு அறியமுடிகின்றது. பெரும்பாலான குறுந்தொகைப் பாடல்களில் தலைவியின் பிரிவுத் துயரினைக் குறிக்கும்போது வளை நெகிழ்ந்ததாகக் குறிப்பிடப்படுவது கருதத்தக்கது (குறுந். 11, 31, 50, 125, 190, 211, 216, 289, 303, 316, 365, 371). அதேபோன்று நற்றிணைப்பாடல்களிலும் வளை நெகிழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகின்றன (நற், 56:5, 214:10, 236:7, 340:10).

**2. காதணி:**

சங்ககாலப் பெண்கள் காதுகளில் வளைந்த தோடுகளை அணிந்திருந்தனர். காதணிகளும் பெண்களின் அழகிய முகங்களை அழகூட்டும் வகையில் அமைந்தன. காதினை அலங்கரிக்கும் ஆபரணங்களில் தோடும் ஒன்றாகும். இத்தோடுகள் பனை ஓலையினால் ஆக்கப்பட்டவையாக விளங்கியதை 'ஓலை வண்டோட்டுத் தெங்கின்' (பெரும்.ஆ. 353) எனும் செய்யுளின் மூலமும், பூவேலைப்பாடமைந்த குண்டலத்தினை காதுகளில் அணிந்து அழகாகத் திகழ்ந்ததனை 'யாங்கா குவள்கொல் பூங்குழை யென்னும்' (குறுந். 159) பாடலடியின் மூலமும் அறியக்கூடியதாக உள்ளது.

**3. ஆரம்**

ஆரம் என்பது மார்பிலணியும் ஓர் ஆபரணமாகும். பருவமடையாத இளம் மகளிர் ஆரம் அணிந்ததை (சிறுபாண். 1-2) சிறுபாணாற்றுப்படை பாடலடிகள் கூலம் அறியலாம். முத்துக்களாலான ஆரம் என்னும் அணிகலனை மகளிர் கழுத்தில் மாலையாக அணிந்ததனையும் (நெடுநல். 136), கொன்றை மலரின்மீதிருக்கும் பனித்துளிகள் போன்று அரும்புகளையுடைய மணிகளாலான அழகிய மேகலையையும் அணிந்தனர்.

**4. தொடி:**

மக்கள் தொடியினையும் அணிந்திருந்தனர். தொடி என்பது தோள்களில் அணிந்துகொள்ளும் ஒருவகை அணிகலனாகும். இத்தொடியினைப் பாகுபாடின்றி ஆண் பெண் என இருபாலாரும் அணிந்திருந்தனர். தொடியினை மூன்று வகையாகப் பகுத்துள்ளனர். அவை கழல் தொடி, கோல் தொடி, தோள் வளையம் என்பனவாகும். நுண்ணிய வேலைப்பாடுடையனவாக ஒளிரும் தொடியானது மிகவும் அழகு வாய்ந்தனவாக மிளிரும். தொடியின் அரிய வேலைப்பாடுகளினால் அது கோல் தொடி என அழைக்கப்பட்டது.

‘கோலமை குறுந்தொடி’ (குறுந். 267).

தலைவனைப் பிரிந்ததனால் மிகவும் வருத்தமடையும் தலைவியின் கைகளில் அணிந்திருந்த செம்பொன்னால் செய்யப்பட்ட தொடிகள் கழன்று விழுந்தன. இதனை

‘நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொட நெகிழ்ந்’ (குறுந். 185)

‘தொடி ஞெகிழ்ந்தனவே’ (குறுந். 239) எனும் பாடலடிகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

தோள்வளையம் சலாகை எனவும் அழைப்பதுண்டு. இது மகளிரினாலே அதிகம் அணியப்பட்டதனை அறியமுடிகின்றது. தலைவனைப்பிரிந்த தலைவி தோள் வளைகளைக் களைவது இலக்கியங்களில் அதிகமாக எடுத்தாளப்பட்டுள்ளது. இத்தோள் வளையானது யானைக் கொம்பினாலும், சங்கினாலும், வெள்ளியினாலும் ஆக்கப்பட்டு மகளிரினால் அணியப்பட்டதனை அறிய முடிகின்றது. மகளிரினால் தோள்வளையம் அணியப்பட்டதனை சீவகசிந்தாமணி உரைவாயிலாகவும் அறியலாம் (சீவக. 2696 உரை.)

தலைவன் நீண்டகாலம் வராதிருந்த காரணத்தினால் தலைவி துயருற்றாள். அவள் தோள்களில் அணிந்த வளையமும் கழன்றது. இதனால் தலைவன் தலைவியின் தோள்களிளிருந்து கழன்று விழாமல் இருக்க பொற்றொடிகள் செய்து தலைவியின் துன்பத்தினைப் போக்கினாhன் என்பதனை,

‘கொடியோர் நல்கா ராயினும் யாழநின்

தொடிவிளங்கிறைய தோள்கவின் பெறீஇ' (குறுந். 367)

எனும் பாடலடிகளினால் அறியக்கூடியதாக உள்ளது. மேலும் பெண்கள் தொடி அணிந்திருந்ததை 'பொற்கோ லவிர் தொடி' (குறுந். 364) எனும் பாடலடிகள் விளக்குகின்றன. பொன்னாலான தொடியினைச் செய்து முன்கையிலணிந்து விளங்கினர் (நெடுநல்.141). இவ்வாறு சங்ககாலப் பெண்கள் தொடி அணிந்து விளங்கியதனை அறியக்கூடியதாக உள்ளது. மேலும் குறுந்தொகையில் மட்டும் பல பாடல்களில் தொடி பற்றிய செய்தியனைக் காணலாம் (குறுந். 7, 185, 233, 238, 243, 296, 356, 367, 379, 384).

**5. மோதிரம்:**

வாளைமீனின் வாயை ஒத்த சிவந்த நிறத்தையுடைய மோதிரத்தை விரலில் அணிந்ததனையும் (நெடுநல்.143) அறியக்கூடியதாக உள்ளது.

தங்கம், வெள்ளி போன்றவற்றால் செய்யப்படுவதும் விரலில் அணிந்து கொள்வதுமான சிறு வளையமான மோதிரம் விரல் அணி, கணையாழி போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

'சுறாவே றெழுதிய மோதிரந் தொட்டாள்' (கலித். 84இ23) எனும் பாடல்

'குட்டுப்பட்டாலும் மோதிர விரலால் குட்டுப்பட வேண்டும்' எனும் பழமொழியும் இங்கு நினைவு கூறத்தக்கது.

**6. சிலம்பு:**

திருமணத்திற்கு முன்னர் பெண்கள் தமது கால்களில் சிலம்பணிந்திருப்பது வழக்கம். சிலம்பினைக் கழட்டுதல் என்பது திருமணத்திற்குரிய அடையாளமாகக் கருதப்பட்டது. திருமணம் நிகழ்வதற்கு முன் மணமகளது காலில் அணிந்திருந்த சிலம்பை நீக்குவதற்கு ஒரு சடங்கு செய்யப்பட்டது. இச்சடங்கானது 'சிலம்பு கழி' எனப்பட்டது. 'தொடியோள் மெல்லடி மேலவுஞ் சிலம்பே' (குறுந். 7:1-2). விழாக்களைக்காணச்செல்லும் அரிவையர்கள் ஒலிபொருந்திய பொற்சிலம்புகளையும் இழைகளையும் அணிந்ததனையும் அறிய முடிகின்றது

**7. கூந்தல் - அலங்காரம்**

பெண்கள் பொதுவாகத் தமது கூந்தலுக்கு நெய் பூசி அழகாக வாரிப் பின்னி அல்லது கொண்டையிடுவர். ஐம்பால் என்னும் குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என ஐந்துவிதமாகக் கூந்தலை அமைப்பர் (சீவகசிந்தாமணி. 2437). முதுமகளிர் வளையின் நிறத்ததையுடைய வாரிய கூந்தலை முடித்துக்கட்டியிருப்பதனை திருமுருகாற்றுப்படையும் (29) மதுரைக்காஞ்சியும் (407-408) குறிப்பிடகின்றது. இளமகளிர் கூந்தலை கீழே தொங்கவிட்டனர்

என்பதனை சிறுபாணாற்றுப்படை (191-192), முல்லைப்பாட்டு (45) ஆகியன குறிப்பிடுகின்றது. தோகை விரிக்கப்பட்ட மயிலின் இறகிற்கு பெண்களின் கூந்தல் உவமிக்கபப்படுகின்றது (சிறுபாணாற்றுப்படை261-264, குறுந்.6-7)

மகளிர் நீராடிய பின்னர் கூந்தலுக்கு அகிற்புகையூட்டுவர். இதனை மணம் வீசுகின்ற அகிற்புகையும் சந்தனப்புகையும் நாறும் கருமணலைப்போன்ற கரிய கூந்தல் எனக்குறுந்தொகையும் (2-3), சந்தனத்தின் நறிய மணத்தை வீசும் நன்னெடுங்கூந்தல் என மதுரைக்காஞ்சியும் (552) குறிப்பிடுகின்றன.

**8. மலர்-மாலை:**

பெண்கள் கூந்தலுக்கு வேங்கை (அகநா.13-15), வெட்சி (குறுந்தொகை. 5-7), நரந்தம் (குறுந். 3), குவளை (குறுந். 1), அடும்பு (நற். 2-3), மல்லிகை ஆகிய பூக்களைச் சூடுவர். அதேபோன்று தண்மையும் அழகும் மணமும் நிறைந்த மலர்மாலைகளையும் (மதுரைக். 561-562), உச்சிக்கொண்டையைச்சுற்றி அழகிய பூமாலைகளையும் (குறிஞ்சி. 103-104) அணிந்தனர்.

**முடிவுரை:**

சங்ககால மகளிர் வாழ்வியல் எவ்வாறு இருந்தது என்பதனையும் அவர்கள் எவ்வகையான ஆடை அணிகலன்களை அணிந்திருந்தனர் என்பதனையும் சங்க இலக்கியச் சான்றுகிளினூடாக அறியமுடிகின்றன. குறிப்பாகப் பெண்கள் தோட்ட வேலைகள் செய்வதிலிருந்து கள் அருந்துவது வரை ஆண்களுக்கு நிகராகச் செயற்பட்டதனை சங்க இலக்கியங்கள் மிகத்தெளிவாகக் குறிப்பிடுகின்றன. அதேபோன்று பெண்கள் தலை, கூந்தல், காது, மார்பு, இடுப்பு, கை, கைவிரல், கால் போன்ற ஒவ்வொரு உறுப்புக்களுக்கும் பல்வேறு வகையான விலையுயர்ந்த பட்டு ஆடைகள் மற்றும் அழகும் பொலிவுமுடைய பலவகையான அணிகலன்களையும் அணிந்திருந்ததனையும் அறியமுடிகின்றன. இத்தகைய ஆடை அணிகலன்களை அன்றுதொட்டு இன்றுவரை அணியப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**உசாத்துணை நூல்கள்:**

1. சங்க இலக்கியங்கள் - எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்

2. கலைக்களஞ்சியம்

3. சங்க இலக்கியச் சொல் அகராதி